யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 08
## First Term Examination – 2020 – Grade 08

| வரலாறு | 33 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

# வரலாறு

பகுதி-I

1) கி.மு6ம் நூற்றாண்டளவில் இலங்கையில் குடியேற்றங்களை அமைத்த குழுக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?
1)சீனா 2)பர்மா 3)இந்தியா 4)அரேபியா

2) இலங்கையில் பெருங்குளங்களை கட்ட ஆரம்பித்த மன்னன் யார்?
1)பண்டுகாபயன் 2)வசபன் 3)மகாசேனன் 4)தாதுசேனன்

3) ஆயிரம் குளங்களைக் கட்டிய மன்னன் யார்?
1) மகாசேனன் 2) தாதுசேனன் 3)1ம் பராக்கிரமபாகு 4) வசபன்

4) மின்னேரியாத்தெய்வம் என அழைக்கப்படுபவர்?
1) தாதுசேனன் 2)1ம்அக்கபோதி 3)மகாபராக்கிரமபாகு 4)மகாசேனன்

5) குளமொன்றின் மேலதிக நீரை வெளியேற்ற உதவும் உறுப்பு யாது?
1)உள்வான்கதவு 2)வான்கதவு 3)கலிங்கல் 4)கலிங்கல்தொட்டி

6) இலங்கைத் தொழினுட்பவியலாளர்களுக்கே உரித்தான நீரியல் தொழில்நுட்பம் யாது?
1) உள்வான்கதவு 2)அலைதாங்கி 3) கலிங்கல்தொட்டி 4) கலிங்கல்

7) நகரத்தை அழகுபடுத்துவதற்கு பொய்கை அமைத்த மன்னன் யார்?
1)பண்டுகாபயன் 2)விஜயன் 3)வசபன் 4)மகாசேனன்

8) குளிப்பதற்காக அமைக்கப்பட்ட பெரிய பொய்கை யாது?
1)ரனமசுப்பூங்காவின்பொய்கை 2)குட்டம்பொய்கை
3)அபயகிரியானைப்பொய்கை 4)தாமரைப்பொய்கை

9) நீர்ப்பூங்கா அமைத்த முதல் மன்னன் யார்?
1)தேயநம்பியதீசன் 2)பண்டுகாபயன்
3)துட்டகைமுனு 4)மூத்தசிவன்

10) இன்றும் காணப்படும் புராதனகாலப் பூங்கா யாது?
1)சிகிரியா 2)ஜோதிவனம் 3)மகாமேகவனம் 4)நந்தவனம்

11) மட்பாண்ட உற்பத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய கண்டுபிடிப்பு யாது?
1)சூளை 2)நிறம்தீட்டுதல் 3)வனைதல்சில்லு 4)செயற்கைகளி



kalvi.lk

12) ஓடு செய்வோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
1)ஓட்டுக்குயவர் 2)ஓட்டுத்தச்சர் 3)ஓட்டுக்கொல்லர் 4)ஓட்டுக்கலைஞர்

13) தோபஷ என அழைக்கப்படும் தொழிலாளர்?
1)கொல்லர் 2)கம்மாளர் 3)செம்புக்கம்மாளர் 4)தகரக்கம்மாளர்

14) இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது தாதுகோபுரம் எது?
1)ரூவன்வெலிசாய 2)மிரிஸவெட்டிய 3)அபயகிரி 4)தூபராம

15) மெதிகிரியவட்டதாகய எத்தகைய படைப்பு ஆகும்?
1)போதிமனை 2)தூபிமனை 3)சிலைமனை 4)ஆராமனை

16) சிகிரியாவினை வெளிக்கொணர்ந்த தொல்பொருள் ஆய்வாளர் யார்?
1)H.C.Pடெல் 2)ஜோன்டெல் 3)செனரத்பரணவிதான 4)செனரத்ராஜசிங்க

17) பொலநறுவைக் கால விசேட அரண்மனைத் தொகுதி யாது?
1)1ம்விஜயபாகுவின் மாளிகை 2)மகாபராக்கிரமபாகுவின் மாளிகை
3)நிசங்கமல்லமன்னனின்மாளிகை 4)6ம்பராக்கிரமபாகுவின் மாளிகை

18) சோழர்காலக் கட்டடக்கலை மரபில் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட சிவன் கோயில் எது?
1)திருக்கோணேஸ்வரம் 2)திருக்கேதீஸ்வரம்
3)2ம் இலக்க சிவன் கோயில் 4)முன்னேஸ்வரம்

19) 1ம் பராக்கிரமபாகுவினால் கட்டப்பட்ட 7அடுக்கு மாளிகை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1)சப்தமண்டபம் 2)கைஜெயந்த கட்டடம்
3)சப்தமஹால் 4)சப்தமகாமண்டபம்

20) பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கல்லில் நீக்கப்பட்ட உருவம் யாது?
1)எருது 2)சிங்கம் 3)மயில் 4)யானை

(20×2=40புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන




kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை துருக.**

01. a. கீழே இலங்கைப்படத்தில் A - F வரையான எழுத்துக்களால் குறிகப்பட்ட இடங்களை குறிக்குக.

1. பொலன்னறுவை
2. அனுராதபுரம்
3. திருகோணமலை
4. செங்கடகல
5. மல்வத்து ஓயா
6. களனி கங்கை




(6 புள்ளிகள்)

b. கீழே தரப்பட்டுள்ள பாடங்களை அவதானித்து வினாக்களுக்கு பொருத்தமபான விடை தருக.

1. இவ்வுருவின் பெயர் யாது?
2. இது எங்கே அமைந்துள்ளது.
3. இது அமைக்கப்பட்ட இராச்சியம்



(3 புள்ளிகள்)

c. 1. இப்படைப்பை எவ்வாறு அழைப்பர்?
2. இப்படைப்பின் உருவாக்கத்துக்கு காரணமான மன்னன் யார்?
3. இவ் ஓவியம் காணபட்படும் இராச்சியம் யாது ?



(3 புள்ளிகள்)

02. 1. நீர்த்தொழில்நுட்பம் என்றால் என்ன?
2. இந்தியாவிலிருந்து வந்த ஆரியக்குழுக்கள் உலர்வலய நதிக்கரைகளைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் 4தருக?
3. ஆரியக் குடியிருப்புக்களை அமைத்த பின்னர் பெருமளவான நீர்ப்பாசனத்திட்டங்கள் உருவானமைக்கான காரணங்கள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

03. 1. இலங்கையில் முதன்முதலில் குளங்களைக் கட்டத் தொடங்கிய மன்னன் யார்?

(1+2 புள்ளிகள்)

2. பாரிய குளங்களை அமைத்ததனால் இலங்கையர் அடைந்த நன்மைகள் 4 தருக.

(4புள்ளிகள்)

3. குளங்களைக் கட்டும் போது எதிர் நோக்கிய சவால்கள் மூன்றினைத் தந்து இரண்டை விளக்குக. (5புள்ளிகள்)

04. 1. குளம் எவ்வாறு உருவாகிறது என்பதை விளக்குக.

2. கீறிட்ட இடங்களை நிரப்புக

| | குளத்தின் பெயர் | அணைப்பட்டின் நீளம் | அணைக்கட்டின் உயரம் | நீரால் நிரப்பப்பட்டுள்ள நிலப்பரப்பு(ஏக்கர்) |
|---|---|---|---|---|
| A | மின்னேரியா வாவி | 1 1/4 மைல் | …………….. | 4670 ஏக்கர் |
| B | கலாவாவி | ……………… | 40 அடி | ………………. |
| C | ………………… | ………………… | ………………… | 5300 ஏக்கர் |

3. குளமொன்றின் முக்கிய பகுதிகள் மூன்றினைத்தந்து இரண்டினை விளக்குகு.

(12புள்ளிகள்)

05. 1. பொய்கை என்றால் என்ன?

2. பொய்கைகள் அமைக்கப்பட்டதன் தேவைகள் 4 தருக.

3. நீர்ப்பூங்காவின் சிறப்பான அம்சங்கள் 4 தருக.

(12புள்ளிகள்)

06. 1. புராதன மனிதர்களால் உற்பத்தி செய்யப்பட்ட மட்பாண்டங்கள் ஆறு தருக

2. a. செங்கற்களால் கட்டப்பட்ட இரு தாதுகோபங்களைத் தருக.

b. அநுராதபுரத்தில் பெரிய செங்கற்கள் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

3. a. இராசரட்டைக்காலத்தில் பயன்படுத்திய உலோகங்கள் இரண்டு தருக.

b. உலோகத் தொழினுட்பம் இலங்கையில் வளர்ச்சியடைய காரணிகள் 3 தருக.

(12 புள்ளிகள்)

07. 1. வாஸ்த்து சாஸ்திரத்திம் என்றால் என்ன?

2. இராசரட்டைக்கால கட்டட நிர்மாணங்களை வகைப்படுத்துக?

3. a. சிலை மனைகளை நிர்மாணிக்கும் முறைகள் மூன்று தருக?

b. போதிமனை என்றால் என்ன? உதாரணம் தருக.

(12புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**